இதழ் 24

# உருமு தனலெட்சுமி கல்லூரி
# நமது வளாகம் – செய்திமடல்




ஜனவரி 2019



'தோன்றின் புகழொடு தோன்றுக' என்னும் வள்ளுவரின் வாக்கிற்கேற்ப வாழ்ந்த பெருந்தகையே நம் கல்லூரி நிறுவனராவார். அவரது கனவுகள் நனவாகும் பொருட்டு இன்று கம் கல்லூரியில் பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, அவற்றிற்கேற்பக் கூட்டங்களும் நடைபெற்று வருகின்றன. அவற்றுள் ஒன்றாக இளங்கலை மூன்றாமாண்டு மற்றும் முதுகலை இரண்டாமாண்டு பயிலும் மாணவர்களுக்கான வேலைவாய்ப்பு மற்றும் தன்னம்பிக்கை விழிப்புணர்வுக் கூட்டம் மிகச்சிறப்பாகக் நடத்தப்பட்டது. மேலும், 'நோக்கும் திசையெல்லாம் நாமன்றி வேறில்லை' என்று பாடிய பாரதியின் பிறந்தநாள் நிகழ்வுப் போட்டிகளில் மாணவர்கள் பரிசுபெற்ற நிகழ்ச்சி இளைய தலைமுறையினருக்குப் பிறமொழி அறிவும் அவசியமென்பதை உணர்த்தி நடத்தப்பெற்ற ஆங்கில நூல் திறனாய்வு அரங்கம், வழக்கம்போல் மாணவர்களுக்கான நூலக வாசகர் வட்ட நிகழ்ச்சி ஆகியவற்றை விவரிக்கிறது இந்தச் செய்திமடல்.

– வாழ்த்துகளுடன், ஆசிரியர் குழு.

You could follow us on
udcnewsletters@gmail.com

ஆசிரியர் குழு

முனைவர் N. கண்ணன்
முனைவர் D. இந்திரகுமாரி
முனைவர் P. செந்தில்
முனைவர் B. பிரதீபா
திரு. R. சுவாமிநாதன்
திரு. S. கார்த்திக் சரவணன்
திரு. R. ஆசைத்தம்பி
முனைவர் G. வடிவேல்முருகன்

நிர்வாகக் குழு

திருமதி பத்மா இராமகிருஷ்ணன், தலைவர்.
திரு. கல்கி இராமகிருஷ்ணன், செயலாளர்.
திரு. G.N. சீனிவாசன், பொருளாளர்.
Dr. மோதி P. கிருபா சங்கர், நிர்வாகக்குழு உறுப்பினர்.
முனைவர் D. கிறிஸ்டி செல்வராணி, கல்லூரி முதல்வர்.




## நாளை நமதே – தன்னம்பிக்கை சிறப்புக் கூட்டம்







28.12.2018 வெள்ளிக்கிழமையன்று காலை 11 மணியளவில் அம்புஜம் அம்மாள் கலையரங்கில், மூன்றாமாண்டு பயிலும் நம் கல்லூரி மாணவர்களுக்கு மேற்கல்வி பயிலவும் வேலைவாய்ப்பு மற்றும் தன்னம்பிக்கை விழிப்புணர்வை ஏற்படுத்த 'நாளை நமதே' என்ற பெயரில் தன்னம்பிக்கை சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. தமிழாய்வுத்துறைப் பேராசிரியர் E.R. இரவிச்சந்திரன் அனைவரையும் வரவேற்று உரையாற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் D. கிறிஸ்டி செல்வராணி அவர்கள் முன்னிலை வகித்தார். பொருளாதாரத்துறைத் தலைவர் பேராசிரியர் முனைவர் K. கலியமூர்த்தி, வணிகவியல் துறைப் பேராசிரியர் முனைவர் M. வசந்தா மற்றும் கணிதத்துறைப் பேராசிரியர் முனைவர் A. மோகன் ஆகியோர் மாணவர்களுக்கு மேற்கல்வி, போட்டித்தேர்வுகள் மற்றும் வேலைவாய்ப்புகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் உரையாற்றினர். அப்போது மாணவர்கள் தாம் படித்த பாடப்பிரிவுடன் தொடர்புடைய வேலைவாய்ப்பினைப் பெற பெற்றோரும் உதவி செய்ய வேண்டும் என்றனர். பொறியியல் பயின்றவர்களைக் காட்டிலும் கலை, அறிவியல் பட்டம் பெற்ற மாணவர்களுக்குத் தொழில்நுட்பப் பணியில் அதிக வேலைவாய்ப்புகள் உள்ளதைச் சுட்டிக்காட்டியதோடு பல குறிப்புகளையும் அளித்தனர். கல்லூரி உடற்கல்வி இயக்குநர் N.S. சிவக்குமார் NCC, NSS போன்றவற்றில் மாணவர்கள் ஈடுபடுவதால் ஏற்படும் வேலைவாய்ப்புகளை எடுத்துக் கூறியதோடு, அண்மையில் விமானப் படையில் வேலைவாய்ப்பினைப் பெற்ற மாணவர்களை அறிமுகப்படுத்தி உரையாற்றினார். கல்லூரி நூலகர் முனைவர் S. ஜெயசித்ரா நூலகத்தைப் பயன்படுத்துவதால் மாணவர்கள் பெறும் வேலை வாய்ப்புகளை எடுத்துரைத்தார். பல்துறைப் பேராசிரியர்கள் ஆற்றிய இவ்வுரைகளின் அடிப்படையில் பெற்றோர்களுக்கு வினாடி–வினாப் போட்டி நடத்தப்பட்டு பரிசுகளும் வழங்கப்பட்டன. கல்லூரிச் செயலர் திரு. கல்கி இராமகிருஷ்ணன் அவர்கள் சிறப்புரையாற்ற, சுயநிதிப்பிரிவுத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் முனைவர் தே. இந்திரகுமாரி அவர்கள் நன்றி கூறினார். கல்லூரியின் கணிதத்துறை மாணவி P. அகல்யா, நுண்ணுயிரியல் துறை மாணவி S. அவிலா, பொருளாதாரத்துறை மாணவி S.M. பெனாசிர் ஆகியோர் இந்நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினர்.







## LIBRARY STUDY CIRCLE

An Awareness Programme was conducted on College Notice Board, Newsletter and various Committee to the Study Circle Students. The following winners were recognized for their best Performance.

1. R .Kirubha - I BA Economics,
2. P.Akalya - III B.Sc Maths,
3. R. Praveena - III B.Sc Maths,
4. V.Kalaiselvi - II M.Com,
5. S.Kalaiyarasi - III B.Sc Maths,
6. E.Muthukumar - III B.Sc Physics,
7. S.Tamildasan - II B.Sc Physics,
8. M.Pramanayagam - II B.Sc. Maths,
9. A.Felix - III B.S.W,
10. J.Jeeva - II M.Com.

## பாரதியார் பிறந்த நாள் போட்டிகள்



மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 137 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு 11.12.2018 அன்று நம் கல்லூரி மாணவர்களுக்குப் பேச்சு மற்றும் கவிதைப் போட்டிகள் நடத்தப்பட்டன. பல மாணவர்கள் பங்குபெற்ற இந்நிகழ்வில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு நம் கல்லூரியின் செயலர் திரு. கல்கி இராமகிருஷ்ணன், முதல்வர் முனைவர் D. கிறிஸ்டி செல்வராணி ஆகியோர் பரிசுகள் வழங்கிச் சிறப்பித்தனர்.

## BOOK REVIEW

**P.Veerasekar** from III B.Sc Physics reviewed a book entitled " Dolar Desam " by B.Ragavan to the study circle students on 26.12.2018. 30 students participated in this book review.

## அயலகத்தில் தமிழ்க் கற்றல் கற்பித்தலின் வளர்ச்சி – சிறப்பு இலக்கியக் கூட்டம்





நமது கல்லூரியில் 24.12.2018 அன்று சுயநிதிப்பிரிவு தமிழ்த்துறையில் "அயலகத்தில் தமிழ்க் கற்றல் கற்பித்தலின் வளர்ச்சி" எனும் பொருண்மையில் சிறப்பு இலக்கியக் கூட்டம் நடைபெற்றது. இந்நிகழ்விற்குச் சிறப்புச் சொற்பொழிவாளராக இலண்டன் பல்கலைக்கழகம் கோல்டுஸ்மித் கல்லூரியின் முன்னாள் பேராசிரியர் சிவாப்பிள்ளை வருகை தந்தார். கல்லூரி முதல்வர் முனைவர் D. கிறிஸ்டி செல்வராணி தலைமை வகிக்க, பேராசிரியர் மா. இராமர் வாழ்த்துரை வழங்கினார். தொடர்ந்து பேசிய சிறப்பு விருந்தினர் இலண்டன் பல்கலைக்கழகத்தில் 2019 சூலை மாதம் 17 ஆம் நாள் தமிழ் இருக்கை துவக்கப்பட உள்ளதைச் சுட்டிக்காட்டி, ஒரு மொழியைக் கற்க வேண்டியதன் அவசியத்தை மாணவர்களிடம் எடுத்துக் கூறினார். நிகழ்ச்சியின் இறுதியில் திரளாகக் கலந்துகொண்ட மாணவர்களிடம் கலந்துரையாடினார். சுயநிதிப்பிரிவுத் தமிழ்த்துறையின் தலைவர் முனைவர் தே. இந்திரகுமாரி இந்நிகழ்விற்கு வரவேற்புரையும் பேராசிரியர் முனைவர் மு. அமிர்தகடேஸ்வரர் நன்றியுரையும் வழங்க பேராசிரியர் முனைவர் கு. வடிவேல்முருகன் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார்.